# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | |
| Preliminary Register : CC.953/2019 | |
| Sessions : | |
| Deposition of Witness for : LW-3/PW- 3 | Village: சாரங்கபாணி புளியம்பட்டி |
| Name : பாலா | Age :47 |
| Father's/Husband's Name : காளிதாஸ் | Taluk : |
| Nationality : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 18.03.2026**

சாட்சியை வனகாப்பாளர் திருமதி. வைஷ்ணவி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜர்.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் வடிவேலுவின் உறவினர் அல்ல. தெருக்காரர். வடிவேல் மின்சார வாரியத்தில் வேலை செய்து வருகிறார். எதிரியின் அண்ணன் மகனுக்கு எனது மகளை நான் திருமணம் செய்து கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. நான் இந்த வழக்கு சம்மந்தமாக நான்தான் வனச்சரக அலுவலகத்திற்கு புகார் கொடுத்தேன். நான் பல புகார்களை வனச்சரகருக்கும் அரசு அதிகாரிகளுக்கும் கொடுத்துள்ளேன். எனக்கு குருநாதனை தெரியும். அவர் எனது

அக்காவின் கணவர். குருநாதனும் ஆஜர் எதிரியும் பங்காளி உறவினர்கள். எனக்கும் குருநாதனுக்கும் எவ்வித தகராறும் இல்லை. எனக்கும் வடிவேலுக்கும் எந்த கருத்து வேறுபாடோ தனிப்பட்ட விரோதமோ இல்லை. 12.05.2018 ம் தேதி வனச்சரகர் என்னை விசாரித்து வாக்குமூலம் எழுதிக் கொண்டார்கள் என்றால் சரிதான். அதில் நானே எழுதி கையொப்பம் செய்துள்ளேன். நடந்த விவரத்தை நான் கைப்பட எழுதி கையொப்பம் செய்து கொடுத்தேன். என்னுடன் வேறு நபர்கள் யாரும் நான் கையொப்பம் செய்து கொடுத்ததில் கையொப்பம் செய்து கொடுக்கவில்லை. நான் மட்டும்தான் கையொப்பம் செய்தேன். நான் முதல் விசாரணையில் 10 க்கும் மேற்பட்ட மயில்கள் இறந்ததாக சாட்சியம் அளித்துள்ளேன். மேற்படி விவரம் என்னை விசாரித்த வன போலிசாருக்கும் தெரியும். இறந்த 10 க்கும் மேற்படி மயில்களை வனச்சரகர்கள் குழி தோண்டி வேல்முருகனுக்கு சொந்தமான வயலில் புதைத்தார்கள். மேற்படி 10 க்கும் மேற்பட்ட மயில்கள் இறந்ததை வனச்சரகர்களும், ஊர்க்காரர்களும் பார்த்தார்கள். குழி தோண்டி புதைத்தையும் ஊர்க்காரர்கள் பார்த்தார்கள். வடிவேல் எனது தெருவில் வசித்து வருகிறார். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் வடிவேல் மயிலுக்கு விஷம் வைத்ததை வீடியோ எடுத்தேனா என்றால் இல்லை. வயலில் இருந்து எனது வீடு 500 மீட்டர் தூரம். நான் பார்த்த மருந்தை வேறு நபர்கள் பார்க்கவில்லை. குருணை விஷம் கலந்து வைத்த வாடை அடித்தது. புகைப்படங்கள் ஆதாரத்திற்காக எடுக்கவில்லை. அதற்கு நான் முயற்சிக்கவும் இல்லை வயலின் மொத்த பரப்பளவு எனக்கு தெரியாது. சுமார் 15 ஏக்கர் இருக்கும் எனக்கு 2 ஏக்கர் நிலம் உள்ளது. கிராமம் முழுவதும் விவசாய நிலம் இருந்தது அனைவரும் பயிர் செய்திருந்தார்கள். என் வீட்டிற்கு பக்கத்தில் 1/2 ஏக்கர் நிலம் உள்ளது. நான் நெல் பயிர் செய்திருந்தேன். எ னது குடும்பம் பரம்பரை பரம்பரையாய் விவசாயம் செய்து வருகிறோம். மயில்கள் என் வயலிலும் மற்றவர்கள் வயலிலும் சேதம் செய்கிறது ஆனால் நான்

மயில்களை கொல்லுவதற்கு முயற்சி செய்யவில்லை. மயில்கள் சேதம் ஏற்படுத்துவதை நான் புகைப்படம் எடுக்கவில்லை. 08.03.2018 ம் தேதி நான் விஷம் வைத்ததை பார்த்தேன். 10.03.2018 ம் தேதி சனிக்கிழமை மயில்கள் இறந்தது. 12.05.2018 ம் தேதி வனச்சரகர்களிடம் வாக்குமூலம் கொடுத்தேன். 08.03.2018 ம் தேதி பார்த்த விபரத்தை வனச்சரகர்களுக்கு தெரிவிக்கவில்லை. என் அப்பா இறந்த தேதி தெரியும். ஆங்கில தேதி 27.03.2025 அன்று இறந்தார் கிழமை நினைவில்லை. என் முதல் விசாரணையில் சொன்னது போல் 10 க்கும் மேற்படி மயில்கள் இறக்கவில்லை என்றாலும் நான் எதிரி மீது இருந்த முன் விரோதத்தின் காரணமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் மயில்கள் இறந்ததற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeswari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர். (FAC)**